**"கண்ணைக் காப்பது இமை "**
**" மண்ணைக் காப்பது மழை "**

# மதுரை மாநகராட்சி

# <u>மாமன்றக் கூட்டம்</u>

**2010ம் ஆண்டு ஜனவரி திங்கள் 22ம் நாள் வெள்ளி கிழமை காலை 10.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

-------------

**திருக்குறள் :** ***" அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்***
***பெரும்பயன் இல்லாத சொல் "***

**பொருள் :** அரும் பொருளை ஆயும் அறிவினையுடையார் வாழ்க்கைக்குப் பெரும் பயனைத் தராத சொற்களைச் சொல்லமாட்டார்கள்.

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## <u>உறுதிமொழி</u>

இந்திய அரசியலமைப்பின்பால். இடைவிடாத. உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான். நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன், தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு. எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று. இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும். உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன், இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(அரசாணை (நிலை) எண்,245 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள் 13.11.98)

## <u>1) சி.டபிள்யு.3/1051/09</u>

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்–1 விதி 19(2)–ன்படி 11.01.2010-ம் தேதி நடைபெற்ற நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**<u>மாமன்ற தீர்மானம் எண்.847</u>**
**பதிவு செய்யப்பட்டது.**

**2) H3/29256/09**

மதுரை மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவு துப்புரவு பணியாளர்களுக்கு 2009-2010–ம் ஆண்டுக்குத் தேவையான கதர் சீருடைத் துணிகளான 1) அரைக்கை சட்டை 2) அரைக்கால் டவுசர் (கிரேகலர்) 3) கதர் பாலிஸ்டர் சேலை (புளூக்கலர்) 4) கதர் பாலிஸ்டர் ஜாக்கெட் துணி (புளூக்கலர்) 5) தலைப்பாகைத்துணி (பச்சைகலர்) ஆகியவற்றை கதர் கிராமத் தொழில்கள் மதுரை என்ற நிறுவனத்தின் மூலமாகவும், கைத்தறி சீருடைத் துணிகள் 1) அரைக்கை சட்டை (கிரேகலர்) 2) அரைக்கால் டவுசர் (கிரேகலர்) 3) தலைப்பாகைத்துணி (பச்சைகலர்) ஆகியவற்றை நேசனல் டெக்ஸ்டைல்ஸ் கார்பரேஷன் லிமிடெட், கோயமுத்தூர் என்ற நிறுவனத்தாரின் மூலமாகவும், கைத்தறி சீருடைதுணிகள் 1) பாலிஸ்டர் புளூகலர் சேலை 2) பாலிஸ்டர் புளூகலர் ஜாக்கெட் துணி தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ் கார்பரேஷன் லிமிடெட், கோயமுத்தூர் என்ற நிறுவனத்தாரின் மூலமாகவும் கொள்முதல் செய்வதற்கு சப்ளை உத்தரவு வழங்குவதற்கும், மேற்படி சீருடைத் துணிகளான கதர் சீருடைத் துணிகள், கைத்தறி துணிகள், ஆகும் செலவுத் தொகை கீழே கண்டவாறு உள்ளதை பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும், வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் **15.12.2009–ல்** முன்ஒப்புதல் பெற்றுள்ளதை மாமன்றத்தின் பின்னேற்பினை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

| குறிப்பு: செலவின் விபரம் | தொகை |
|---|---|
| கதர் சீருடைத் துணிகளுக்கு தேவையான செலவு | ரூ. 7,46,862- |
| கைத்தறி துணிகளுக்கு தேவையான செலவு | ரூ. 6,71,353- |
| மொத்தம் | ரூ.14,18,215- |

**மாமன்ற தீர்மானம் எண்.848**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது**

**3) H3/03907/09**

மதுரை மாநகரில் 2009-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்திருவிழா, அருள்மிகு கள்ளழகர் திருவிழாவிற்கும், மாட்டுத்தாவணிக்கும் வருகை தரும் பொதுமக்களின் வசதிக்காக துப்புரவு பணிகள், குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, மின் வசதி, தற்காலிக துப்புரவு ஊழியர்கள் ஊதியம், சாதனங்கள், கிருமி நாசினிகள், பிரச்சார விளம்பர பொருட்கள், தற்காலிக கொட்டகைகள் மற்றும் இதர செலவினங்களுக்காக உத்தேசமாக ஏற்படும் செலவு ரூ.45,00,000/- ஐ (ரூபாய் நாற்பத்தி ஐந்து லட்சம் மட்டும்) வழக்கம் போல் மாநகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்ய வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் 13.03.09-ல் முன்ஒப்புதல் வழங்கப்பட்டதற்கும், மேற்படி பணிகள் நடைபெறுவதற்கான செலவினங்கள் அடங்கிய படிவம் அறிக்கை1-ன் தொகை ரூ.45,00,000/- ஐ (ரூபாய் நாற்பத்தி ஐந்து லட்சம் மட்டும் ) முதலாம் படிவ அறிக்கையை பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர், சென்னை அவர்களின் ஒப்புதலுக்கு 30.04.2009–ல் அனுப்பப்பட்டதற்கும் கீழே கண்டவாறு பொதுசுகாதாரப்பிரிவின் செலவினங்கள் மற்றும் பொறியியல் பிரிவில் செலவினங்களை வழங்கப்பட்டதற்கும் மாமன்றத்தின் பின்னேற்பினைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

| வ. எண். | உத்தேச செலவினங்களுக்கு ஏற்படும் பணிகள் விபரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | திருவிழா பகுதிகளில் மின் விளக்கு வசதி ஏற்பாடு செய்தது | 1,47,060- |
| 2. | ஓபுளாபடித்துறை திருவிழா பகுதி தடுப்பு ஏற்படுத்துதல், தண்ணீர் வசதி செய்தல் | 4,20,041- |
| 3. | ஆழ்வார்புரத்தில் கள்ளழகர் ஆற்றில் இறங்கும் இடம் கிராவல் பரப்புதல் | 4,96,229- |
| 4. | கள்ளழகர் ஆற்றில் இறங்கும் இடம் ரோம்ப் அமைத்தல் | 4,77,517- |
| 5. | திருவிழாப் பகுதி PVC டேங்க் மூலம் குடிநீர் சப்ளை | 80,000- |
| 6. | பணிக்கு நியமிக்கப்பட்ட தற்காலிக தினக்கூலி துப்புரவு ஊழியர் சம்பளம் 530 ஊழியர்கள் | 4,93,972- |
| 7. | கிருமி நாசினிகள், பூச்சிக்கொல்லிகள், சுண்ணாம்புத் தூள், மருந்துகள் முதலியன | 5,87,120- |
| | மொத்த செலவினம் ரூ. | 27,01,939- |

**மாமன்ற தீர்மானம் எண்.849**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**4) ம.பொ.3/20849/09**

மதுரை மாநகராட்சி, வடக்கு மண்டலம் வார்டு எண்.6, மாட்டுத்தாவணியில் மத்திய காய்கறி அங்காடி கட்டப்பட்டு வருகிறது. மேற்கண்ட வளாகத்தில் 3 கழிப்பறைகள் பொதுநிதியிலும் 2 கழிப்பறைகள் மதுரை பாராளுமன்ற உறுப்பினர் நிதியிலும் கட்டப்படவுள்ளது. சென்ட்ரல் மார்கெட் அனைத்து காய்கறி வியாபாரிகள் நலச்சங்கத்தினர் புதிதாக கட்டப்படவிருக்கும் கழிப்பறைகள் மற்றும் நலச்சங்கத்திற்கு 1000 சதுர அடியில் கட்டிடம் கட்டுவதற்குரிய செலவினத் தொகையை தாங்களே செலுத்தி பராமரிப்பு செய்து கொள்வதாக கடிதம் கொடுத்துள்ளனர். மேற்படி கடிதத்தின் அடிப்படையில் கழிப்பறைகள் மற்றும் வியாபாரிகள் நலச்சங்கம் கட்டிடத்திற்கு ஆகும் செலவுத் தொகை ரூ.50.00 இலட்சமாகும். மேற்கண்ட செலவினத்தை செலுத்திய பின்பு கழிப்பறையை 10 ஆண்டுகள் பராமரிப்பு செய்து மீண்டும் மாநகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் சென்ட்ரல் மார்கெட் அனைத்து காய்கறி வியாபாரிகள் நலச்சங்கத்திற்கு அனுமதி வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.850**

**மீண்டும் பரிசீலித்து வைக்கவும்.**

**5) H3/36100/09**

மதுரை மாநகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவின் வார்டு 26, மேலப்பொன்னகரத்தில் ஏற்கனவே இயங்கி வரும் பொன்னகரம் மருந்தகத்தை மேலப்பொன்னகரம் 2வது தெருவில் புதிதாக கட்டப்பட்டுள்ள மருந்தகத்திற்கு மாற்றம் செய்வதற்கும், மேற்படி மருந்தகத்திற்கு தேவையான உபகரணங்களை வாங்குவதற்கான உத்தேச செலவினம் ரூ.22,00,000/-ஐ BSUP நிதியில் ஒதுக்கீடு செய்வதற்கும், மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.851**

**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**6) மே.ம.பொ3/000229/10**

மதுரை மாநகராட்சி, மேற்கு மண்டலம, வார்டு 26-ல் அமைந்துள்ள கோமஸ்பாளையம் குடிசைப் பகுதியில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ஏசி சீட் கூரையால் ஆன கட்டிடம் கட்டி அங்குள்ள மக்கள் பல ஆண்டுகளாக குடியிருந்து வருவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குடியிருந்து வரும் வீட்டிற்கு தொடர்ந்து பல ஆண்டுகளாக சொத்துவரி மாநகராட்சிக்கு செலுத்தி வருகின்றனர். மேற்கண்ட கூரை வீடுகள் பழுதடைந்த நிலையில் இருப்பதாலும் அடிப்படை வசதிகள் மற்றும் சுகாதாரமற்ற சூழ்நிலையிலும் குடியிருந்து வருவதாலும் ஒவ்வொருவருக்கும் **10'X 10'** என்ற அளவில் மட்டும் குடியிருப்பு இருப்பதாலும், அதனை மாற்றி **JnNurm** பங்களிப்புடன் **BSUP** திட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் 274 ச.அடி பரப்பளவில் ஒவ்வொரு குடியிருப்போரும் வீடு கட்டிக் கொள்ளவும் மேற்படி இடத்தில் தரைத்தளம் மற்றும் மேல்தளமாக அமைத்துக்கொள்ளவும் மாநகராட்சியின் மூலம் தடையில்லாச் சான்று வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண். 852**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**7) ம.வ.3/28381/2009**

மதுரை மாநகராட்சியின் மத்திய காய்கறி மார்கெட், அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயில் அருகில் அமைந்துள்ளதால், அவ்விடத்தில் போக்குவரத்து இடையூறு மற்றும் சுகாதாரக்கேடு விளைவிப்பதாலும், அருள்மிகு மீனாட்சியம்மன் கோயில் உலக அதியசங்களில் ஒன்றாக எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதால், மதுரை மாநகரின் முக்கியமான சுற்றுலாத்தலமாக விளங்குவதாலும் அவ்விடத்தில் உள்ள மத்திய காய்கறி மார்கெட்டை மட்டும் வேறு இடத்திற்கு மாற்றம் செய்யப்படுவதற்கு மதுரை மேலூர் ரோட்டில் மாட்டுத்தாவணியில் காய்கறி மார்கெட் அமைக்கும் பணி ரூ.8.00 கோடி மதிப்பீட்டில் பணி நடைபெற்று வருகிறது.

தற்சமயம் கட்டப்பட்டு வரும் மார்கெட்டில் ஏற்கனவே பழைய மத்திய காய்கறி மார்கெட்டில், உள்ள கட்டிட கடைக்காரர்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்கு தகுந்தவாறும் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் கழிப்பறை வசதிகள், குடிநீர் வசதி, மின்வசதி என அனைத்து அடிப்படை வசதிகள் செய்து கீழ்கண்டவாறு கடைகள் கட்டப்படுகிறது.

**புதிதாக கட்டப்படும் மார்கெட்டில் அமையவுள்ள கடைகள் விபரம்**

| வ.எண். | கடைகள் அளவு | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 8'x 8' | **240** |
| 2 | 13'6" x 13'x 6" அடி | **284** |
| 3 | 8'x 8" அளவுள்ள தரைக்கட்டடிங்கள் | **750** |

ஏற்கனவே மத்திய காய்கறி மார்கெட்டில் உள்ள பழைய கடையின் வாடகைதாரர்களுக்கு ஏற்கனவே செலுத்திய மூன்று மாத வாடகையை டெபாசிட் தொகையுடன் கூடுதலாக புதிய வைப்புத் தொகையாக பெரிய அளவில் ஆன 13'6"x13'x6" கடைகளுக்கு ரூ4.லட்சமும், சிறிய அளவில் ஆன 8'x8'கடைகளுக்கு ரூ3.லட்சமும் 8'x8' அடி அளவுள்ள தரைக் கடைகளுக்கு ரூ2.லட்சமும், பெற்று குறைந்தபட்ச வாடகையாக முறையே ரூ.5000-, ரூ.4000- மற்றும் ரூ.2000- என நிர்ணயம் செய்யவும்.

1) மேலும் புதியதாக கட்டப்படும் மார்கெட்டில் மொத்த கடைகள் 524 ல் ஏற்கனவே பழைய கடையின் வாடகைதாரர்களுக்கு கடை வைக்க அனுமதி வழங்கியது போக, மீதமுள்ள கடைகளை ஏலத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யலாம்.

**2)** பசும்பொன் முத்துராமலிங்கம் நாளங்காடி (மேட்டுக்கடை) தரைக் கடைகளில் உள்ள வியாபாரிகளுக்கு, புதிய மார்கெட்டில் அமைக்கவுள்ள தரை கடைகள் 750- ம் பழைய வாடகைதாரர்களுக்கு ஏலத்தின் மூலம் கடை வைக்க அனுமதி வழங்கவும் மாமன்றத்தின் முடிவினை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.853**

**பொருளில் காணும் கடைகள் அளவு 13'6"x 13'6" ரூ.1.50 லட்சம் எனவும், 8' x 8"- க்கு ரூ.1 லட்சம் எனவும், 8' x 8" அளவுள்ள தரைக்கடைக்கு ரூ.75,000/- எனவும் புதிய வைப்புத் தொகையாக நிர்ணயம் செய்தும், கட்டிடம் கட்டி முடிந்தவுடன் வாடகை முடிவு செய்யலாம் எனவும் குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**8) JnS.1(ம.வ.)/28381/2009**

அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயில் அருகில் அமைந்துள்ள மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான மத்திய காய்கறி அங்காடியில், போதிய அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தினாலும், போக்குவரத்து நெரிசலையும் ஏற்படுத்துவதோடு, பழமை வாய்ந்த மீனாட்சியம்மன் கோவிலின் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ள காரணத்தினால், மத்திய காய்கறி அங்காடியை ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான 26.74 ஏக்கர் காலியிடத்தில், (சர்வே எண் : T.S. No.5/1,5/2,9/1,(Part) of Ward XVI, Block -65 of Madurai Corporation, Mattuthavani,Madurai) புதிதாக கட்டுவதற்கு திட்டமிடப்பட்டது. தற்போது மதுரை மாநகராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததாலும், கடன் பெற்று அங்காடி கட்டினாலும், மாநகராட்சிக்கு நிதிச்சுமை ஏற்படும் என்பதாலும், மாநில அரசின் வாரியமான தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் மூலம் நீண்டகால வணிக குத்தகை அடிப்படையில் இடத்தில் மாநகராட்சிக்கு தேவையான கடைகளை கட்ட திட்டமிடப்பட்டது.

மேற்படி புதிய மத்திய காய்கறி அங்காடியை,விவசாயிகள், விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படைவசதிகளுடன் மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் (Tamilnadu State Agriculature Marketing Borad) மூலம் ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான 26.74 ஏக்கர் காலியிடத்தில், சர்வே எண் : T.S. No.5/1,5/2,9/1,(Part) of Madurai Corporation, Mattuthavani,Madurai)ல், தற்போது மத்திய காய்கறி அங்காடியில் இயங்கிவரும் கீழ்கண்ட விபரப்படி கடைகளை கட்டி, மதுரை மாநகராட்சியால் நிர்ணயிக்கப்படும் குறைந்த பட்ச மாதாந்திர வாடகை அடிப்படையில், தற்போதுள்ள மாதாந்திர வாடகைத்தராக்கும், குத்தகைக்காரருக்கும், மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்டும் குறைந்த பட்ச கட்டிட அளவுகளின்படி கட்டுவதற்கும், மேற்படி வாரியத்திற்கு 33 ஆண்டுகளுக்கு வணிக குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கும் மேற்படி காலியிடத்திற்கு அரசின் நிர்ணயம் செய்யும் விலை விகிதத்தில், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்திற்கு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>கடைகளின் விபரம்</u>

| வ. எண் | கடைகளின் எண்ணிக்கை | கடைகளின் குறைந்த பட்சஅளவுகள் | கடைகளின் மாதாந்திர வாடகை |
|---|---|---|---|
| 1 | 50 | 9.00 x 6.00 மீ | ரூ.8,000/- |
| 2 | 624 | 5.00 x 4.00 மீ | ரூ.5000/- |
| 3 | 600 | 4.00 x 3.00 மீ | ரூ.4,000/- |

<u>நிபந்தனைகள் :</u>

1) சர்வே எண். T.S. No.5/1,5/2,9/1,(Part) of Ward XVI, Block -65 of Madurai Corporation, Mattuthavani,Madurai நில உரிமம் தொடர்ந்து மாநகராட்சி வசம் இருக்கும். எக்காரணத்தை முன்னிட்டும் நில உரிமம் மாற்றம் செய்ய இயலாது.
2) கட்டிட வரைபட அனுமதி மாநகராட்சியிடம் பெற வேண்டும்.
3) மதுரை மாநகரட்சி அனுமதி இல்லாமல் கூடுதல் கட்டிடம் கட்டக்கூடாது.
4) மத்திய மாநில அரசின் வழிகாட்டுதலின்படி, மேற்படி கடைகள் மற்றும் தேயைான அடிப்படை வசதிகள் கட்டப்பட வேண்டும்
5) அரசாணையின்படி, மூன்றாண்டு ஒருமுறை மட்டுமே கடைகளுக்கான வாடகை உயர்வு செய்யப்பட வேண்டும்.
6) மதுரை மாநகராட்சிக்கு கொடுக்கப்பட வேண்டிய குத்தகைத் தொகை மூன்று ஆண்டிற்கு ஒருமுறை அரசு விதிகளின் படி நிர்ணயம் செய்யப்படும்.
7) அனைத்து இயக்குதல் மற்றும் (கட்டிடம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை உட்பட )தாங்களே செய்து கொள்ள வேண்டும்.
8) பேருந்து நிலையத்தின் பின்புறம் வரைபடத்தில் கொடுக்கப்பட்டுள்ளவாறு சாலை அமைக்கப்பட வேண்டும்.
9) மத்திய காய்கறி அங்காடி கட்டுவதற்கு தேவையான அனைத்து துறையின் அனுமதிகள் தாங்களே பெற்றுக் கொள்ள வேண்டும்
10) மதுரை மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய குத்தகை தொகை ஒவ்வொரு ஆண்டும் உரிய காலத்திற்குள் செலுத்தப்பட வேண்டும்
11) மதுரை மாநகராட்சி அனுமதியின்றி மேற்படி இடத்தை வேறு எந்த பயன்பாட்டிற்கும் பயன்படுத்தக் கூடாது.
12) மதுரை மாநகராட்சி அனுமதியின்றி புதிய வாடகைதாரர் / குத்தகைதாரருக்கு (வியாபாரிகள்) கடைகள் வழங்கக் கூடாது.
13) பொதுப்பணித்துறை (Pacification ) படி கட்டிடம் கட்டப்பட வேண்டும்.
14) மேற்படி இடத்தினை குத்தகை காலம் முடிந்தவுடன், இருந்தது இருந்த நிலையில் கடைகளுடன் மாநகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டும்.

**<u>மாமன்ற தீர்மானம் எண். 854</u>**

**தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (டுபிட்கோ) மூலம் கடன் பெற்று மாநகராட்சியே கட்டிடம் கட்ட மாமன்றம் தீர்மானிக்கிறது.**

**<u>9) ம.வ.4/34211/2009</u>**

மதுரை மாநகராட்சி வார்டு எண்.26, ஆரப்பாளையம் கோமஸ்பாளையம் பகுதியில் புதிதாக கடைகள் கட்டப்படவுள்ளது. ஆரப்பாளையம் பேருந்து நிலையம் புதியதாக புனரமைப்பு பணி செய்யும்போது அவ்விடத்தில் இருந்த கடைகள் அகற்றப்பட்டன. ஆரபப்பாளையம் பேருந்து நிலையத்தில் இடவசதியை கருத்தில் கொண்டு, அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்ட கடைகளில் சிலருக்கு மட்டும் கடை வைக்க அனுமதி வழங்கப்பட்டது. மேலும் பல பேர்களுக்கு கடைகள் வைக்க அனுமதி வழங்க இடவசதியில்லாத காரணத்தால் கடைகள் கொடுக்கப்படவில்லை. ஆனால் கடைகள் ஒதுக்கீடு செய்யப்படாதவர்களுக்கும் தொடர்ந்து அன்று முதல் இன்று வரை பேருந்து நிலைய பகுதியில் கடைகள் நடத்தி வருகிறார்கள். இதனால் மாநகராட்சிக்கு எவ்வித வருவாயும் இல்லை. எனவே

இவர்களுக்கும் புதிதாக கட்டப்படவுள்ள கடைகளை ஏலம் விட்டு ஏற்கனவே சில கடைகளுக்கு ஒதுக்கீடு செய்த தேதி முதல் இவர்களுக்கும் முன் தேதியிட்டு ஒதுக்கீடு செய்தால் மாநகராட்சி வருவாய் ஏற்படும். எனவே இவர்களுக்கு ஏலம் அடிப்படையில் புதிய கடைகளை வழங்குவதற்கும், வைப்புத்தொகை ரூ2.லட்சம் என நிர்ணயம் செய்வதற்கும், மாதாந்திர லைசன்ஸ் தொகையும் நிர்ணயம் செய்வதற்கு மாமன்றத்தின் முடிவினைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண். 855**

**பொருளிலுள்ள கடைகளுக்கு ரூ.1.50 லட்சம் வைப்புத் தொகை என நிர்ணயம் செய்தும், ஆரப்பாளையம் பேருந்து நிலையத்திலுள்ள பிற கடைகளுக்கு நிர்ணயம் செய்ததுபோல் மாதாந்திர லைசென்ஸ் தொகை நிர்ணயம் செய்யவும் மாமன்றம் தீர்மானிக்கிறது.**

**(ஒம்...)ஜி.தேன்மொழி**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 13.01.2010**

"கண்ணைக் காப்பது இமை"

"மண்ணைக் காப்பது மழை"

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2010ம் ஆண்டு ஜனவரி திங்கள் 22-ம் நாள் வெள்ளிகிழமை காலை 12.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

**1) சி.டபிள்யு.3/ 16627/2009**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்–1 விதி 19(2)–ன்படி 24.12.2009–ம் தேதி நடைபெற்ற வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண். 856**
**பதிவு செய்யப்பட்டது.**

**2) H1/01080/05**

மதுரை மாநகராட்சி மேற்கு மண்டல வளாகத்தில் அமைந்துள்ள 24 மணி நேர E.O.C. மருத்துவமனையில் குடும்ப கட்டுப்பாடு அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் தாய்மார்களுக்கும் அரசால் உதவித் தொகை வழங்கப்பட்டுவருகிறது. சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை அரசாணை G.O.M.S.NO.165 03.06.2008ன் படி குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை 400லிருந்து 600ஆக உயர்த்தப்பட்டதை தொடர்ந்து அவசர அவசியத்தை முன்னிட்டு அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் தாய்மார்களுக்கு வழங்க முன்பணம் ரூ.10,000/- லிருந்து ரூ.20,000/-ஆக உயர்த்தி வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் ஒப்புதலுக்கும், தகவலுக்கும் வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண். 857**
**பதிவு செய்யப்பட்டு குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது**

**3) B1/000080/09**

மதுரை மாநகராட்சி 2008–2009ம் ஆண்டிற்கு பொங்கல் போனஸ் A மற்றும் B பிரிவினருக்கு ரூ1000/-எனவும், C மற்றும் D பிரிவினருக்கு ரூ.3000/- எனவும் வழங்க அரசாணை எண் : G.O. No. 1 நாள் : 02-01-2010 ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணையினை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** 2008–2009ம் ஆண்டில் 240 நாட்களுக்கு குறையாமல் பணியாற்றிய ஊழியர்களுக்கு பொங்கல் போனஸ் வழங்கப்படுகிறது. இதற்கான கூடுதல் செலவு சுமார் ரூ. 1.25 கோடி ஆகும்.

**மாமன்ற தீர்மானம் எண். 858**
**பதிவு செய்யப்பட்டது.**

**4) H1/07407/09**

மதுரை மாநகராட்சி முத்து சாரதா மகப்பேறுமனையில் 05.08.96-ல் வாங்கப்பட்ட Ultra Sound Scanner Machine பழுதாகிவிட்டதால், அதனை பழுது பார்க்க நடவடிக்கை எடுத்ததில்,

பழுது பார்ப்புச் செலவு ரூ.1,90,000/- க்கு ஆகுமெனத் தெரிவித்ததன் பேரில் புதிய மிஷின் வாங்கப்பட்டு உபயோகத்தில் இருந்து வருகிறது. பழைய மெசினை Condemn செய்வது சம்பந்தமாக நகர்நல அலுவலர்(பொ) தலைமையில் மகப்பேறுமனைகள் கண்காணிப்பாளர், மருத்துவ அலுவலர், உதவிப் பொறியாளர் அடங்கிய ஒரு குழு அமைத்து ஆய்வு செய்யப்பட்டு, ஆய்வறிக்கையின் பேரில் " Ultra Serve Systems" என்ற நிறுவனத்தின் குறிப்புக் கோரப்பட்டது. Ultra Serve Systems நிறுவனத்தினர் மேற்படி மெசினை Condemn செய்து விடலாம் எனத் தெரிவித்துள்ள 10.07.09–ம் தேதிய கடிதம் வாசிக்கப்பட்டு அதன் பேரிலும் நால்வர் குழுவினர் மேற்படி Ultra Sound Scanner Machine-ஐ Condemn செய்து விடலாம் எனத் தெரிவித்ததின் பேரிலும் மேற்படி மெசினை Condemn மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>**மாமன்ற தீர்மானம் எண்.859**</u>

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது. மேலும் பழுதாகியுள்ள அல்ட்ரா சவுண்டு ஸ்கேனர்மிசினை ஏலம்விட நடவடிக்கை எடுக்க வேண்டியது.**

## <u>5) மபொ5/32471/2009</u>

மதுரை மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண்.46, பேலஸ் சாலையில் அமைந்துள்ள பந்தடி ஆரம்ப பள்ளியில் வடபுரம் இரு அறைகள் காலியாக உள்ளன. மேற்கண்ட இரு அறைகளை வாடகை அடிப்படையில் நூலகம் அமைத்துக்கொள்வதற்கு மாவட்ட நூலக அலுவலர் அவர்களிடமிருந்து கடிதம் (ந.க.எண்.1263/ஈ/2007, நாள்:12.08.09) வரப்பட்டுள்ளது. எனவே மாநகராட்சி நிர்ணயம் செய்யும் வாடகை அடிப்படையில் வழங்கவும், ஏற்கனவே நூலக வரியாக மாநகராட்சி செலுத்தவேண்டிய தொகையிலிருந்து வாடகை ஈடு செய்து கொள்ளவும், மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>**மாமன்ற தீர்மானம் எண்.860**</u>

**பொதுப்பணித்துறை கட்டண விகிதத்தில் வாடகை நிர்ணயம் செய்து குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

## <u>6) அ10/36060/09</u>

மதுரை மாநகராட்சி உயர்நிலை மேல்நிலை பள்ளிகளில் அவசியத்தேவைக்கான செலவினங்களுக்கு அரசால் வழங்கப்படக்கூடிய சிறப்புக் கட்டணம் 2009-2010-ஆம் கல்வி ஆண்டிற்கு வழங்கப்படாத காரணத்தாலும், மேலும் பெற்றோர் ஆசிரியர் கழக நிதியில் போதுமானதாக இல்லாததாலும் (ஒரு மாணவருக்கு ரூ.25- வீதம் 15530 மாணவர்களுக்கு ரூ.3,88,250-(மூன்று லட்சத்து எண்பத்தி எட்டாயிரத்து இருநூற்று ஐம்பது) கல்வி பொது நிதியில் இருந்து ரூபாய் வழங்க மாமன்றத்தின் ஒப்புதல் கூறும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு. <u>**பின்குறிப்பு**</u> **:** 2008-2009 மற்றும் 2009-2010 கல்வி ஆண்டிற்கான அரசு இடம் இருந்து பெறக் கூடிய சிறப்புக் கட்டண நிதி (ந.எண்.அ10/04627/09) பெற அனுமதிக்கு கடிதம் அனுப்பட்டுள்ளது.

<u>**மாமன்ற தீர்மானம் எண்.861**</u>

**அரசிடமிருந்து பெற வேண்டிய சிறப்பு கட்டணத்தை விரைவாக பெற்று மாநகராட்சி நிதியில் சேர்க்க வேண்டும் என்ற நிபந்தனையின்படி குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

## <u>7) ம.வ.2/38798/2008</u>

மதுரை மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட வருவாய் தரும் இனங்களான மார்க்கெட்டுகள், நவீன கழிப்பிடங்கள், ஆடு மாடு வதை செய்யுமிடங்கள், கார் / வேன் மற்றும் சைக்கிள் ஸ்டாண்டுகள், சுற்றுலா வாகனங்கள் நிறுத்தும் இடங்கள், அவனியாபுரம் மற்றும் சக்கிமங்கலம் புல் பிளாட்டுகள் ஆகியவற்றிற்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 2009-2010–ம் ஆண்டிற்கு டெண்டர் / பொது ஏலம் நடத்தப்பட்டு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் வழங்க மாமன்ற தீர்மானம் எண். 673 நாள்: 27.01.2009–ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை அரசாணை (நிலை) எண்.78 நாள்: 25.05.2009–ல் மாநகராட்சியிலுள்ள சந்தைகள், பேருந்து நிலையங்கள், வாகன நிறுத்துமிடங்கள், கட்டண கழிப்பிடங்கள் மற்றும் தங்கும் விடுதிகள் போன்ற அனைத்து இனங்களுக்கும் கட்டணங்கள் வசூல் செய்யும் உரிமத்திற்கான குத்தகை கால அளவை ஓராண்டிலிருந்து 2009–2010 முதல் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை ஏலம் நடத்த கீழ்க்கண்ட

நிபந்தனைகளுக்குட்பட்டு ஆணை பிறப்பித்துள்ளது. ஷை அரசாணையை மாமன்றத் தீர்மானம் எண். 720 நாள்:30.06.2009–ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1) ஆரம்பத்தில் ஏலத்தின் மூலம் பெறப்படும் குத்தகை தொகையில் ஒவ்வொரு ஆண்டும் ஐந்து விழுக்காடு குத்தகை தொகை உயர்வு செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. அதாவது இரண்டாம் ஆண்டில் 5% குத்தகை உயர்வும், மூன்றாம் ஆண்டில் முந்தைய ஆண்டின் தொகையில் 5% உயர்வும் செய்யப்படும்.
2) மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை அங்காடிகள் / பேருந்து நிறுத்தங்கள், சந்தைகள், சைக்கிள் நிறுத்தங்கள், கட்டண கழிப்பிடங்கள், தங்கும் விடுதிகள் ஆகிய இடங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் பொது ஏலம் விடப்படும்.

மேற்கண்ட அரசு ஆணையின்படி 2009 - 2010-ன் ஆண்டில் ஏலத்தில் மூலம் கட்டணங்கள் வசூலிப்பதற்கான உரிமம் வழங்கப்பட்ட இனங்களுக்கு 2010–2011ம் ஆண்டிற்கு முந்தைய ஆண்டு உரிமத் தொகையில் 5 விழுக்காடு குத்தகை தொகை உயர்வு செய்து உரிமம் நீடிப்பு வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலுக்கும், 2009-2010 ஆண்டில் ஏலம் / டெண்டர் நடத்தியும், ஏலம் / டெண்டர் போகாத இனங்கள், தற்போது இலாகா மூலம் வசூல் செய்யப்பட்டு வரும் இனங்கள் மற்றும் புதிதாக சேர்க்கப்பட வேண்டிய இனங்களையும் சேர்த்து ஏலம் / டெண்டர் நடத்துவதற்கும், புதிய இனங்களுக்கு மதிப்பு நிர்ணயம் செய்வதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணைாளரின் குறிப்பு.

<u>குறிப்பு:</u> இலாகா மூலம் வசூல் செய்யப்படும் இனங்கள் மற்றும் ஏலத்தில் சேர்க்க வேண்டிய புதிய இனங்களின் பட்டியல்கள் தயாரித்து கோப்பில் வைக்கப்பட்டுள்ளது.

**<u>மாமன்ற தீர்மானம் எண். 862</u>**

**1) 2009 - 2010ம் ஆண்டில் ஏலம் விடப்பட்ட இனங்களுக்கு அரசாணைப்படி 5% கூடுதலாக வசூல் செய்து 2010 - 2011ம் ஆண்டிற்கு நீடிப்பு செய்யவும்,**
**2) 2009 - 2010ம் ஆண்டில் ஏலம்/டெண்டர் போகாத இனங்கள், தற்போது இலாகா மூலம் வசூல் செய்யப்பட்டு வரும் இனங்கள் மற்றும் புதிதாக சேர்க்கப்பட வேண்டிய இனங்கள் ஆகியவற்றிற்கு ஏலம் / டெண்டர் நடத்துவதற்கும், பட்டியலில் கண்டுள்ள இலாகா மூலம் வசூல் செய்யப்படும் இனங்களில் வழக்கு தொடரப்பட்டுள்ள இனங்களான செல்லூர் மார்க்கெட் மற்றும் கீழமாரட் வீதி மார்க்கெட்டுகளுக்கு வழக்கு விரைவில் முடிக்கப்பெற்றவுடன் ஏலம் நடத்தவும், பட்டியலில் கண்டுள்ள ஏலம் / டெண்டர் போகாத இனங்கள், புதிய இனங்கள் மற்றும் மூன்றாண்டுகளுக்கு ஏலம் விடப்பட்ட இதர இனங்களில் கண்டுள்ள 3 இனங்கள் ஆகியவற்றிற்கு ஆணையாளர், வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுடன் கலந்துபேசி மதிப்பு நிர்ணயம் செய்ய வேண்டியது எனவும், மாட்டுத்தாவணியில் வியாழக்கிழமைதோறும் கூடும் கால்நடைசந்தை, பசும்பொன் முத்துராமலிங்க நாளங்காடி கழிப்பிடம் ஆகிய இனங்களை நீக்கம் செய்வதற்கும், பட்டியலில் கண்டுள்ள,**

**1) சென்ட்ரல் மார்க்கெட், மாட்டுத்தாவணி அமைக்கப்பட்டுள்ள தற்காலிக சென்ட்ரல் மார்க்கெட்டுக்கு செல்வதால், சென்ட்ரல் மார்க்கெட் சைக்கிள் கட்டணம் வசூலிக்கும் உரிமம் நிரந்தர சென்ட்ரல் மார்க்கெட் அமைக்கும் வரையிலும்**
**2) பசும்பொன் முத்துராமலிங்கம் தினசரி மார்க்கெட்**
**3) மீனாட்சி பூங்கா கழிப்பிடம்**
**4) ஆடு வதை செய்யுமிடம்**

**வரிசை எண்.2 முதல் 4 வரையிலான இனங்களுக்கு இடம் மாற்றம் செய்யும் வரையிலும்,**
**மேலும், வரிசை எண்.1 முதல் 4 வரையிலான இனங்களுக்கு ஏற்கனவே மாமன்ற தீர்மானம் நிர்ணயம் செய்துள்ள கட்டண அடிப்படையில் ஒவ்வொரு மாத ஈவுத் தொகையை பெற்றுக்கொண்டு பழைய உரிமதாரர்களுக்கு வழங்கிடவும் மாமன்றம் தீர்மானிக்கிறது.**

## <u>8) அ10/39915/08</u>

மதுரை மாநகராட்சி, பாண்டியன் நெடுஞ்செழியன் உயர்நிலைப்பள்ளியில் செயல்பட்டு வரும் நூலகத்திற்கு தொகுப்பூதிய அடிப்படையில் நூலகராக பணியாற்றி வரும் திருமதி.கா.கனகதுர்கா அவர்களது பணி நியமனத்தை ஏற்றுக் கொண்டு தொடர்ந்து பணியாற்றிட 15.12.2009-ல் நடைபெற்ற கல்விக் குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கல்விக் குழு தீர்மானம் வரிசை எண். 5 ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண். 863</u>**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**<u>9) அ7/20751/09</u>**

மதுரை மாநகராட்சி பந்தடி ஆரம்பப்பள்ளியில் 2009-2010ம் கல்வியாண்டில் மாணவர்கள் சேர்க்கை இல்லாததால் பள்ளி செயல்படாமல் இருந்து வருகிறது. பந்தடி ஆரம்பள்ளியை மூடிவிட்டு, மாணவர்கள் அதிகமாக இருக்கின்ற மகால் உயர்நிலை பள்ளிக்கு ஆரம்பள்ளி கட்டிடத்தை ஒப்படைக்கலாம் என்றும் 15.12.2009-ல் நடைபெற்ற கல்விக்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கல்விக் குழு தீர்மானம் வரிசை எண். 3 ஏற்றுக்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண். 864</u>**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்.) ஜி. தேன்மொழி**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**நாள் : 20.01.2010.**
**மதுரை.**

* * * * * * * *

# OUT OF AGENDA

1) ந.பொ. 1 / 19479 / 08

மதுரை மாநகராட்சியின் சார்பில் ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளில் மாநகராட்சி பகுதிகளில் விடுபட்ட இடங்களில் புதிதாக பாதாள சாக்கடை அமைத்தல் மற்றும் பழமையான பாதாள சாக்கடை அமைப்பினை புதுப்பித்தல் போன்ற பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றது. இதன் ஒரு பகுதியாக கழிவு நீரேற்று நிலையம் எண். 1 முதல் 8 A வரையிலான கீழ்க்கண்ட வார்டுகளில் பாதாள சாக்கடை அமைப்பினை மாற்றம் செய்யப்பட வேண்டியுள்ளது.

| வ. எண். | கழிவு நிலைய விபரம் | வார்டு பகுதிகள் |
|---|---|---|
| *1* | *2* | *3* |
| 1 | கழிவு நீரேற்று நிலைய எண். 1 | 36 பகுதி, 37, 38, 39, 40, 43 பகுதி, 44 பகுதி, 46, 47, 48, 49, 50, 51, 52 பகுதி, 54, 55 |
| 2 | கழிவு நீரேற்று நிலைய எண். 2 | 44 பகுதி, 45 |
| 3 | கழிவு நீரேற்று நிலைய எண். 3 | 31, 32, 38 பகுதி |
| 4 | கழிவு நீரேற்று நிலைய எண். 4 | 32 பகுதி, 33 பகுதி |
| 5 | கழிவு நீரேற்று நிலைய எண். 5 | 22 பகுதி, 33, 34, 35, 36 பகுதி |
| 6 | கழிவு நீரேற்று நிலைய எண். 6 | 36 |
| 7 | கழிவு நீரேற்று நிலைய எண். 7 | 34 பகுதி, 35 பகுதி |
| 8 | கழிவு நீரேற்று நிலைய எண். 8 | 22, 23, 24, 25, 26, 27 பகுதி |
| 9 | கழிவு நீரேற்று நிலைய எண். 8 A | 25, 26 |

மேற்கண்ட வார்டுகளில் உள்ள சாலைப் பகுதிகளை தோண்டி பாதாள சாக்கடை பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே சாலைப் பணிகள் மேற்கொள்ளப்படும் பகுதிகளில் நடைபெறும் சாலை மராமத்து பணிகளை உடனடியாக நிறுத்துவதற்கும், பணிகள் முழுமையாக முடிவடைந்தவுடன் அனைத்து சாலைகளையும் மராமத்து பணிகள் மேற்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண். 865**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**2) மபொ.4/32646/09**

மதுரை மாநகராட்சி வார்டு எண்.11 ல் டாக்டர் தங்கராஜ் சாலையில் அரசு சட்டக்கல்லூரி உள்ளது. இதற்கு வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது அதன் அடிப்படையில் அரசு சட்டக்கல்லூரிக்கு ஒரு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டு நல்ல முறையில் குடிநீர் வழங்கப்படுகிறது.

தற்போது சட்டக்கல்லூரிக்கு ஒரு குடிநீர் குழாய் மூலம் வரும், குடிநீர் போதுமானதாக இல்லை என்றும் மாணவர்களின் நலன் கருதி மேலும் ஒரு குடிநீர் குழாய் இணைப்பு வழங்குமாறு முதல்வர் அரசு சட்டக்கல்லூரி அவர்களின் கடிதம் பரிசீலனை செய்யப்பட்டு அதன் பேரில் மேலும் ஒரு குடிநீர் குழாய் இணைப்பு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண். 866**

**கட்டண அடிப்படையில் குடிநீர் குழாய் இணைப்பு வழங்க குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**3) Jn.S.5/33382/08**

மதுரை மாநகராட்சி, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் நகரில் விடுபட்டுள்ள பகுதிகளுக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைத்தல் மற்றும் பழைய பாதாளச் சாக்கடை திட்டத்தினை புனரமைப்பு செய்து நிறைவேற்ற திட்ட மதிப்பீடு ரூ.243.58 கோடிக்கு மத்திய மற்றும் மாநில அரசின் ஒப்புதல் பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டு தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றது. மேற்கண்ட திட்டத்திற்கு மாநகராட்சி பங்குத் தொகை 30% ஒப்பந்தப்புள்ளி கூடுதல் தொகை மற்றும் விலை விகித கூடுதல் தொகை ஆக மொத்தம் ரூ.109.38 கோடிக்கு அரசுக்கு சொந்தமான நிதி நிறுவனங்களில் கடன் பெற முயற்சிகள் மேற்கொண்டு கிடைக்காத காரணத்தினால் மாமன்ற தீர்மானம் எண்.791, நாள்.24.09.09ன் படி IL & FS நிறுவனத்தின் மூலம் ரூ.109.38 கோடிக்கு கடன் பெற அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட நிறுவனத்தினர் பட்டியலில் கண்ட நிபந்தனைகளுடன் கடன் வழங்க தெரிவித்துள்ள கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண். 867**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**4) Jn.S.2/32798/08**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட 208 குடிசைப்பகுதிகளில் உள்ள குடிசை மற்றும் ஓட்டு வீடுகளை கான்கிரீட் வீடுகளாக மாற்றுவதற்கு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மத்திய மாநில அரசு உதவியுடன் கீழ்க்கண்ட இரண்டு திட்டங்களாக நிறைவேற்றப்படுகிறது.

1) மாநகராட்சியில் அங்கீரிக்கப்பட்ட குடிசைப் பகுதிகளில் குடிசை மற்றும் ஓட்டு வீடுகளை கான்கிரீட் வீடுகளாக மாற்றுதல்.
2) அங்கீகரிக்கப்படாத குடிசைப்பகுதிகளான ரயில்வே இடம், நீர்நிலைகளில் உள்ள குடிசைப்பகுதிகள், கோயில் நிர்வாகத்திற்கு சொந்தமான இடம் மற்றும் மாநகராட்சிக்கு சொந்தமான இடம் ஆகிய பகுதிகளில் உள்ள அங்கீகரிக்கப்படாத குடிசைப்பகுதி மக்களை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி குடியிருப்புகளில் குடியமர்த்துதல்.

மேற்கண்ட இரண்டு திட்டங்களில், இரண்டாவது திட்டத்தின்கீழ் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் ராஜாக்கூர் பெரியார் நகர் பகுதிகளில் கட்டப்படும் 1566 குடியிருப்புகளில் மறுகுடியமர்வு (Resettlement) செய்ய கீழ்கண்ட குடிசைப்பகுதிகளை அகற்றி பயனாளிகளை குடியமர்த்த மாமன்றத்தின் ஒப்புதல் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**அங்கீகரிக்கப்படாத குடிசைப்பகுதிகள் :**

**தெற்கு மண்டலம் :**

| | | |
|---|---|---|
| 1. | ஹீரா நகர் வார்டு 31 | – 239 பயனாளிகள் |
| 2. | எப்.எப். ரோடு வார்டு 43 | – 103 பயனாளிகள் |
| 3. | ரத்தினபுரம் வார்டு 41 | – 24 பயனாளிகள் |
| **கிழக்கு மண்டலம் :** | | |
| 4. | சுடலைமுத்துபிள்ளை சந்து வார்டு 50 | –118 பயனாளிகள் |
| 5. | தூமாட்டி ரெங்கசாமி ஐயர் தெரு வார்டு 50 | –90 பயனாளிகள் |
| 6. | நாகம்மாள் மடம் வார்டு 58 | –103 பயனாளிகள் |
| **மேற்கு மண்டலம் :** | | |
| 7. | போடிலைன் வார்டு 29 | –358 பயனாளிகள் |
| **வடக்கு மண்டலம் :** | | |
| 8. | சீனிநாயக்கர் தோப்பு வார்டு 10 | –139 பயனாளிகள் |
| 9. | வைகை வடகரை வார்டு 10 | –327 பயனாளிகள் |
| 10. | ஆர். ஆர்.மண்டபம் கிழக்கு வார்டு 10 | – 256 பயனாளிகள் |
| 11. | ஆர். ஆர். மண்டபம் மேற்கு வார்டு 10 | – 100 பயனாளிகள் |
| 12. | தத்தனேரி மயானம் வார்டு 2 | –205 பயனாளிகள் |
| 13. | தல்லாக்குளம் ஏரி தெரு (தமிழிசை சங்கம் அருகில்) வார்டு 11 | –250 பயனாளிகள் |
| | **மொத்தம்** | **–2312** பயனாளிகள் |

**மாமன்ற தீர்மானம் எண். 868**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**